## தூய்மை யான நகரங்களுக்கான மக்கள் இயக்கம்

தூய்மையான நகரங்களுக்கான மக்கள் இயக்கம் அனைத்துத்தர மக்களின் பங்களிப்புடன் 2022 ஜுன் 3ஆம் தேதி (03.06.2022) அன்று அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் துவங்கப்பட்டன.

இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட 6 வகையான தலைப்புகளில் இதன் செயல்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் முதலாவது செயல்பாடு **"பெருமளவில் மக்கள் பங்களிப்புடன் பொது இடங்களை சுத்தம் செய்தல் ஆகும்"**.

ஜுன்மாதம் 11 ஆம் தேதி அதாவது, ஜுன் மாதம் 2வது சனிக்கிழமை அன்று **"பெருமளவில் மக்கள் பங்களிப்புடன் பொது இடங்களை சுத்தம் செய்தல் வேண்டும்"** என்ற தலைப்பின் கீழ் உள்ள அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கீழ்க்கண்ட அறிவுரைகளைப் பின்பற்றி இப்பணிகளை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

- மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுடன் இத்தூய்மை பணிக்கான ஒருங்கிணைப்பு கூட்டத்தை நடத்த வேண்டும்.
- தூய்மை உறுதிமொழியுடன் பணியை துவங்கிட வேண்டும்.
- உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள் / பிரபலமானவர்களை இப்பணியில் முன்னின்று நடத்திட கேட்டுக் கொள்ள மற்றும் ஊக்கப்படுத்த வேண்டும்.
- தூய்மைப் பணியில் ஈடுபடுத்தப்படும் தன்னார்வலர்களின் பெயர் மற்றும் பொதுத் தகவல்களை திரட்டுவது மற்றும் ஆவணப்படுத்தும் பணியை துவக்குதல் வேண்டும்.

- தூய்மைப் பணிக்கு தேவையான அனைத்து இயந்திரங்கள் (BOV, LCV, Tipper lorry, JCB) / உபகரணங்கள் ஆயத்த நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- அனைத்து தன்னார்வலர்கள், சேவை நிறுவனங்கள், வணிகர்கள், தொழில் நிறுவனங்களுடன் இதற்கான ஆயத்த கூட்டங்கள் நடந்த வேண்டும்.
- தூய்மை பணிகள் மேற்கொள்ள பட வேண்டிய இடங்கள்.
  - ✓ பேருந்து நிலையம்
  - ✓ பூங்காங்கள்
  - ✓ வழிபாட்டுத்தலங்கள் வெளிப்புறம்
  - ✓ இரயில் நிலையங்கள் வெளிப்புறம்
  - ✓ சுற்றுலாதலங்கள்
  - ✓ நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு குடியிப்பு பகுதிகள்
  - ✓ குடிசைப்பகுதிகள்
  - ✓ தகனமேடை சுற்றுப்புறம்
- அனைத்து தன்னார்வலர்களுக்கு உரிய அடையாள அட்டை, தொப்பி மற்றும் பாதுகாப்பிற்கான கையுறை, முகக்கவசம் போன்றவை வழங்கப்பட வேண்டும்.
- பள்ளி மாணவர்களால் உயர் வகுப்பு பள்ளி மாணவர்கள் அதாவது 9ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்கள் மட்டுமே தூய்மைப் பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.
- குப்பைகளை சேகரிக்க துணிப்பை அல்லது மக்கும் தன்மையுள்ள சாக்குப்பை போன்றவற்றையே பயன்படுத்திட வேண்டும். பிளாஸ்டிக்காலான பைகளை உபயோகிப்பதை தவிர்க்க வேண்டும்.
- சேகரிக்கப்படும் மக்கா குப்பையை எடையிட்டு செயலாக்க மையத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.

- சுவர்களில் உள்ள அனைத்து விளம்பரங்களை மற்றும் எழுத்துக்களையும் நீக்கி சுவர்களை வெள்ளை அடித்தல் வேண்டும்.
- சுவர்களில் விளம்பரம் நீக்கி கலைநயமிக்க வண்ண விளம்பரங்கள் தீட்டுபவர்களுக்கு அதற்கான பொருட்களை ஏற்பாடு செய்துத் தர வேண்டும்.
- அரசு அலுவலகங்களில் உள்ள சுவர்களில், அலுவலக அனுமதியுடன் தூய்மைக்கான மக்கள் இயக்கம் தொடர்பான விளக்கப்படங்களை வரைதல்.
- '**எனது குப்பை எனது பொறுப்பு**' என்ற வாசகம் பெரியளவில் பிரபலப்படுத்தப்பட வேண்டும்.
- பேருந்து நிலைய சுவர்கள், மேம்பாலங்களின் கீழ் உள்ள சுவர்கள் மற்றும் பொதுச்சுவர்களில் கலை நயமிக்க வண்ண விளம்பரங்களை வரைதல் வேண்டும்.
- எப்போதும் குப்பை கொட்டப்படும் இடங்கள் (Hotspot) கண்டறியப்பட்டு, குப்பையை முழுதும் அகற்றி, அந்த இடத்தை மாற்று பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும். சுவர்கள் இருப்பின், வண்ண ஓவியங்கள் வரைந்து அழகு படுத்தி, மீண்டும் குப்பை சேராவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- குப்பை மற்றும் தேவையற்ற பொருட்களின் தேக்கத்தினால் உபயோகமற்று இருக்கும் நடைபாதைகளை தூய்மைப்படுத்தி, நடைபாதையை மக்கள் பயன்பாட்டிற்கு உடனே கொண்டு வர வேண்டும்.
- சாலையோரங்களில் உள்ள அனைத்து கட்டிட கழிவுகளை அப்புறப்படுத்த வேண்டும்.
- அனைத்து அரசு அலுவலக பகுதியிலும் தூய்மை பணியை மேற்கொள்ள வேண்டும்.

- குடியிருப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்களில் தேங்கியிருக்கும் குப்பைகளை அகற்றுதல் வேண்டும்.
- சமுதாய கழிப்பறை மற்றும் பொதுக் கழிப்பறைகளை தூய்மையாக வைத்திருப்பதன் அவசியத்தை தன்னார்வலர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.
- சமுதாய கழிப்பறை மற்றும் பொதுக்கழிப்பறைகளை தூய்மைப் பணியாளர்கள் / ஒப்பந்தத்தாரர்கள் உதவியுடன் சுத்தப்படுத்த வேண்டும்.
- சமுதாய கழிப்பறை மற்றும் பொதுக் கழிப்பறைகளை ODF+ தரத்திற்கு மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.
- பணி ஆரம்பிக்கும் முன்பும், பணி முடித்த பின்பும் இடம் நாள் நேரத்துடன் கூடிய புகைப்படங்கள் எடுத்து உரிய விவரங்களுடன் ஆவணப்படுத்த வேண்டும் மற்றும் உரிய ஆவணங்களை தூய்மை இந்தியா போர்ட்டலில் (MIS portal) பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- அனைத்து இடங்களில் மேற்கொள்ளப்படும் அனைத்து தூய்மைப் பணிகளையும் செய்தித்தாள், உள்ளூர் தொலைக்காட்சி மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலம் மிகப்பெரிய அளவில் மக்களுக்கு சென்றடை வேண்டும்.
- பணியின் போது தன்னார்வலர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு தேநீர், சிற்றுண்டி போன்றவை ஏற்பாடு செய்து கொடுத்தல் வேண்டும்.

இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம் குப்பையை பிரித்து (Source segregation) கொடுப்பதை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவது மற்றும் அதற்கான மாற்றத்தை பெருமளவில் மக்களிடையே கொண்டு வருவதே ஆகும். அதனை வலியுறுத்தும் வகையிலேயே அனைத்து செயல்பாடுகளும் அமைக்கப்பட வேண்டும்.